www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

kanchipuram District

# முதல் திருப்புதல் பொதுத்தேர்வு - 2023

R

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண் :

## கணக்குப்பதிவியல்

நேரம் : 3.00 மணி | மதிப்பெண்கள் : 90

பகுதி - அ

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 20 x 1 = 20

1. நிதித் தகவல்களின் அகப் பயனாளராக கருதப்படுபவர் யார்?
அ) கடனீந்தோர் ஆ) பணியாளர்
இ) வாடிக்கையாளர் ஈ) அரசு

2. இந்தியாவில் கணக்கியல் தரநிலைகளை வழங்கும் அமைப்பு
அ) இந்திய மைய வங்கி
ஆ) இந்திய அடக்க விலை மற்றும் கணக்காளர் நிறுவனம்
இ) உச்சநீதிமன்றம்
ஈ) இந்தியப் பட்டயக் கணக்காளர் நிறுவனம்

3. சொத்து கணக்கு கையாள்வது
அ) தனிப்பட்ட நபர்கள் அ) செலவுகள் மற்றும் இழப்புகள்
இ) சொத்துகள் ஈ) வருமானம் மற்றும் இலாபங்கள்

4. பேரேட்டுக் கணக்குகள் தயாரிப்பதன் முக்கிய நோக்கம்
அ) நிதி நிலைமையை அறிய ஆ) இலாபம் அல்லது நட்டத்தை அறிய
இ) நிதி நிலைமை மற்றும் இலாப நட்டத்தை அறிய
ஈ) ஒவ்வொரு பேரேட்டுக் கணக்கின் இருப்பை அறிய

5. இருப்பாய்வு என்பது ஒரு
அ) அறிக்கை ஆ) கணக்கு இ) பேரேடு ஈ) குறிப்பேடு

6. நிலைச் சொத்துக்கள் கடனுக்கு வாங்கியது பதிவு செய்ய வேண்டிய ஏடு
அ) கொள்முதல் ஏடு ஆ) விற்பனை ஏடு
இ) கொள்முதல் திருப்ப ஏடு ஈ) உரிய குறிப்பேடு

7. சில்லறை ரொக்க ஏட்டின் இருப்பு
அ) ஒரு செலவு ஆ) ஒரு இலாபம் இ) ஒரு சொத்து ஈ) ஒரு பொறுப்பு

8. வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயாரிக்கப்படுவது
அ) வங்கி யரால் ஆ) வணிகத்தால்
இ) வணிகத்தின் கடனாளிகளால் ஈ) வணிகக் கடனீந்தோரால்

9. இருப்பாய்வின் வேறுபாடு எடுத்துச் செல்லப்படுவது
அ) முதல் கணக்கிற்கு ஆ) வியாபாரக் கணக்கிற்கு
இ) அனாமத்துக் கணக்கிற்கு ஈ) இலாப நட்டக் கணக்கிற்கு

10. தேய்மானம் எதனால் ஏற்படுகிறது?
அ) காலப்போக்கு ஆ) பயன்பாடு இ) வழக்கொழிவு ஈ) அ, ஆ மற்றும் இ

11. வருவாயினச் செலவின் பலன் கிடைப்பது
அ) கடந்த காலத்திற்கு ஆ) எதிர்காலத்திற்கு
இ) நடப்பு காலத்திற்கு ஈ) எந்த காலத்திற்கும்

12. இருப்புநிலைக் குறிப்பு என்பது
அ) ஓர் கணக்கு ஆ) ஓர் அறிக்கை
இ) ஓர் அறிக்கையும் இல்லை, ஓர் கணக்கும் இல்லை
ஈ) மேல் கூறியவற்றில் எதுவுமில்லை

13. நிகரலாபம்
அ) முதல் கணக்கில் பற்று வைக்கப்படும் ஆ) முதல் கணக்கில் வரவு வைக்கப்படும்

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

14. Tally என்பது இதற்கு உதாரணமாக இருக்கிறது.
அ) உருவாக்கப்பட்ட கணக்கியல் மென்பொருள்
ஆ) ஆயத்த கணக்கியல் மென்பொருள்
இ) உள்கட்டமைக்கப்பட்ட மென்பொருள்
ஈ) திருத்தியமைக்கப்பட்ட கணக்கியல் மென்பொருள்

15. நிதிநிலைக் கணக்கின் அடிப்படையாக விளங்குவது
அ) சமூகக் கணக்கியல் ஆ) காரியதரிசிகளின் கணக்கியல்
இ) மேலாண்மைக் கணக்கியல் ஈ) பொறுப்பு கணக்கியல்

16. கு.ப.எ. என்பது
அ) பேரேட்டு பக்க எண் ஆ) குறிப்பேட்டு பக்க எண்
இ) சான்று சீட்டு எண் ஈ) இருப்பு கட்டுதல்

17. ரொக்க ஏடு ஒரு
அ) துணை ஏடு ஆ) முதன்மை ஏடு
இ) உரிய குறிப்பேடு ஈ) துணையேடு மற்றும் முதன்மை ஏடு இரண்டும்

18. ஒரு நிறுவனத்தின் சொத்துக்கள் மதிப்பு `2,00,000 மற்றும் அதன் பொறுப்புக்கள் `1,60,000 எனில், அந்நிறுவனத்தின் முதல்
அ) `1,60,000 ஆ) `60,000 இ) `1,00,000 ஈ) `40,000

19. ஒரு நிறுவனத்தில் இயந்திரத்தின் மதிப்பு `5,00,000 தேய்மானம் விகிதம் 10% எனில் தேய்மானத் தொகை
அ) `50,000 ஆ) `5,000 இ) `500 ஈ) `400

20. பின்வருவனவற்றில் பிரதிநித்துவ ஆள்சார் கணக்கு எது?
அ) கட்டடம் கணக்கு ஆ) கொடுபட வேண்டிய சம்பள கணக்கு
இ) சொத்துக் கணக்கு ஈ) பிரதிநித்துவ ஆள்சார் கணக்கு

## பகுதி - ஆ

II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 30 கட்டாய வினா) 7 x 2 = 14

21. கணக்கியல் தகவல்களில் ஆர்வமுடைய நபர்கள் யாவர்?
22. ஆள்சார் கணக்குகள் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன?
23. ஏதேனும் நான்கு துணை ஏடுகளின் வகைகளைக் குறிப்பிடுக.
24. எதிர்ப்பதிவு என்றால் என்ன?
25. விடுபட்ட பகுதிகளை நிரப்புக :

| | சொத்துக்கள் | | பொறுப்புகள் | | முதல் |
|---|---|---|---|---|---|
| a) | 30,000 | = | 20,000 | + | ? |
| b | ? | = | 25,000 | + | 30,000 |

26. 2018 ஜனவரி 1 அன்று விவேக் என்பவரின் ஏடுகளில் கீழ்கண்ட இருப்புகள் காணப்பட்டன.
சொத்துகள் : ரொக்கம் ரூ.40,000 ; சரக்கிருப்பு ரூ.50,000 ; இயந்திரம் ரூ.40,000 ; ராம் என்பவரிடமிருந்து பெற வேண்டியது ரூ.20,000;
பொறுப்புகள் : விஜய் என்பவருக்கு செலுத்தவேண்டியது ரூ.10,000.
தொடக்கப் பதிவு தருக

27. பின்வரும் நடவடிக்கைகளை ஜவுளி வியாபாரம் செய்யும் மகேஷின் உள் திருப்ப ஏட்டில் பதிவு செய்க.

2017 ஏப்ரல் 6 தரம் குறைவு என சங்கர் ஒரு சட்டை ரூ.150 வீதம் 30 சட்டைகளை திருப்பி அனுப்பினார்.
ஏப்ரல் 8 ஆணைப்படி இல்லாததால் அமர் தையலகம் ஒரு பனியன் ரூ.100 வீதம் 10 பனியன்களை திருப்பி அனுப்பியது.

28. இருப்பாய்வு தயாரிக்கும் முன் கண்டறியப்பட்ட பின்வரும் பிழைகளைத் திருத்தம் செய்யவும்.
அ) விற்பனை ஏட்டின் மொத்தம் ரூ.1000 குறைவாக கூட்டப்பட்டுள்ளது.
ஆ) கொள்முதல் திருப்ப ஏட்டின் மொத்தம் ரூ.2000 அதிகமாக கூட்டப்பட்டுள்ளது.

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



29. பின்வரும் செலவுகளை முதலினம் அல்லது வருவாயினம் எனக் கூறவும்.
   1) அறைகலன் பழுதுபார்த்தது ரூ.50,000
   2) பழைய கட்டிடத்தை இடித்து புதிய கட்டிடம் கட்டியது ரூ.4,00,000

30. சரிக்கட்டுப் பதிவு தருக :
   1) கொடுபடவேண்டிய கூலி ரூ.5,000
   2) இறுதி சரக்கிருப்பு ரூ.50,000 என மதிப்பிடப்பட்டது.

## பகுதி - இ

III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 40 கட்டாய வினா) 7 x 3 = 21

31. இரட்டைப்பதிவு கணக்கியல் முறையின் பொன்னான விதிகளைத் தருக.

32. 'ஒரு வணிக நிறுவனம் தொடர்ச்சியாக நடைபெற வேண்டும்' - இந்த வாக்கியத்தை அடிப்படையாகக் கொண்ட கணக்கியல் கருத்தை விளக்குக.

33. குறிப்பேட்டினை பேரேட்டுடன் வேறுபடுத்துக.

34. கொள்முதல் ஏட்டின் படிவத்தை தருக.

35. பின்வரும் குறிப்பேட்டுப் பதிவுகளில் விடுபட்ட தகவல்களை நிரப்புக.

| நாள் | விவரம் | பற்று | வரவு |
|---|---|---|---|
| | ________ க/கு ப.<br>________ க/கு<br>[ரொக்கத்திற்கு கொள்முதல் செய்தது `20,000] | ________ | ________ |
| | ________ க/கு ப.<br>________ க/கு ப.<br>நேகா க/கு<br>[`18,800 பெற்றுக்கொண்டு நேகாவின் `19,000 ற்கான க/கு தீர்க்கப்பட்டது] | 200 | ________ |

36. பின்வரும் நடவடிக்கைகளிலிருந்து அறைகலன் கணக்கைத் தயாரிக்கவும்.

| | | | தொகை |
|---|---|---|---|
| 2019 ஜனவரி | 1 | கையில் உள்ள அறைகலன் | 2000 |
| | 1 | அறைகலன் ரொக்கத்திற்கு வாங்கியது | 4000 |
| | 30 | அறைகலன் விற்றது | 400 |

37. கீழ்க்கண்ட கணக்குகளின் இருப்புகள் இருப்பாய்வில் பற்றுப்பத்தியில் இடம் பெறுமா அல்லது வரவுப் பத்தியில் இடம் பெறுமா எனக்காட்டிடுக.
   i) கொள்முதல் ii) எடுப்பு iii) வரா கடன் iv) விற்பனை
   v) முதல் vi) தள்ளுபடி பெற்றது

38. பின்வரும் விவரங்களிலிருந்து ஜெயக்குமார் என்பவரின் 2016 டிசம்பர் 31-ஆம் நாளுக்குரிய வங்கி சரிகட்டும் பட்டியலைத் தயாரிக்க.
   அ) ரொக்க ஏட்டின்படி இருப்பு ரூ.7130
   ஆ) செலுத்திய காசோலை வசூலாகாதது ரூ.1000
   இ) வாடிக்கையாளர் நேரடியாக வங்கியில் செலுத்தியது ரூ.800

39. ஒரு நிறுமம் ரூ.50,000 மதிப்புள்ள கட்டிடம் ஒன்றை வாங்கியது. கட்டிடத்தின் பயனளிப்பு காலம் 10 ஆண்டுகள். அதன் இறுதி ரூ.5000. நேர்கோட்டு முறையில் தேய்மானத் தொகை மற்றும் தேய்மான விகிதம் கணக்கிடுக.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



40. கீழ்க்காணும் தகவல்களிலிருந்து 2016 டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபாரக்கணக்கு தயாரிக்கவும்.

| | ரூ. |
|---|---|
| தொடக்க சரக்கிருப்பு (1.1.2016) | 10,000 |
| கொள்முதல் | 26,100 |
| விற்பனை | 40,600 |
| இறுதிச்சரக்கிருப்பு (31.12.2016) | 13,500 |

## பகுதி - ஈ

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7 x 5 = 35

41. அ) வாகன உதிரிபாகங்கள் விற்பனை செய்யும் சசிகுமாரின் ஏடுகளில் பின்வரும் நடவடிக்கைகளுக்கு குறிப்பேடட்டுப் பதிவு தருக.

| | | தொகை |
|---|---|---|
| 2017 அக்டோபர் 1 | வியாபாரம் தொடங்குவதற்காக இட்ட சரக்கின் மதிப்பு | 40,000 |
| 3 | வணிகத்தில் இட்ட ரொக்கத்தின் மதிப்பு | 60,000 |
| 4 | அருளிடமிருந்து கடனுக்கு வாங்கிய சரக்கின் மதிப்பு | 70,000 |
| 6 | அருளிற்கு திருப்பிய சரக்கின் மதிப்பு | 10,000 |
| 10 | அருளின் கணக்கில் செலுத்திய தொகை | 60,000 |

*(அல்லது)*

ஆ) பின்வரும் விவரங்களிலிருந்து ஆனந்த் என்பவரின் கணக்கைத் தயாரிக்கவும்.

| | | தொகை |
|---|---|---|
| 2017 ஜூலை 1 | ஆனந்த் கணக்கின் வரவு இருப்பு | 4,000 |
| 15 | ஆனந்துக்கு ரொக்கம் செலுத்தியது | 2,000 |
| 18 | ஆனந்திடமிருந்து கடனாகக் கொள்முதல் செய்தது | 8,000 |
| 20 | ஆனந்துக்கு ரொக்கம் செலுத்தியது | 3,960 |
| | அவர் அளித்த தள்ளுபடி | 40 |
| 25 | ஆனந்திடமிருந்து கடனுக்கு கொள்முதல் செய்தது | 5,000 |

42. அ) பின்வரும் நடவடிக்கைகளின் கணக்கியல் சமன்பாட்டினை தயார் செய்க.

அ) முருகன் ரூ.80,000 பணத்துடன் தொழிலைத் தொடங்கினார்.

ஆ) ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ரூ.30,000

இ) ரொக்கமாக வழங்கிய சம்பளம் ரூ.5,000

ஈ) குமாரிடமிருந்து சரக்கு வாங்கியதற்கு பணம் வைப்பு இயந்திரம் மூலமாக செலுத்தப்பட்டது ரூ.5,000

உ) கூடுதல் முதலீட்டு ரூ.10,000

*(அல்லது)*

ஆ) பாபு என்பவரது ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட கீழ்காணும் இருப்புகளைக் கொண்டு 31.3.2016 ஆம் நாளுக்குரிய இருப்பாய்வைத் தயாரிக்கவும்.

| | | | |
|---|---|---|---|
| கை ரொக்கம் | 7,000 | பெறுவதற்குரிய மாற்றுச்சீட்டு | 7,000 |
| பற்பல கடனாளிகள் | 5,400 | பற்பல கடனீந்தோர் | 11,800 |
| சம்பளம் | 6,800 | முதல் | 25,000 |
| வாராக்கடன் | 200 | கொள்முதல் | 45,000 |
| தொடக்க சரக்கிருப்பு | 15,400 | விற்பனை | 50,000 |

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



43. அ) பின்வரும் நடவடிக்கைகளைக் கொண்டு நிரஞ்சன் அவர்களின் 2017 பிப்ரவரி மாதத்திற்கான துணை ஏடுகளை தயாரிக்கவும்.

| | | |
|---|---|---|
| 2017 பிப்ரவரி 1 | முகில் நிறுவனத்திடம் கடனுக்கு சரக்கு வாங்கியது | 12,480 |
| பிப்ரவரி 4 | சச்சின் நிறுவனத்திற்கு கடனுக்கு சரக்கு விற்றது | 15,000 |
| பிப்ரவரி 6 | மனிஷ் நிறுவனத்திற்கு கடனுக்கு சரக்கு விற்றது | 12,100 |
| பிப்ரவரி 7 | சச்சின் நிறுவனம் திருப்பிய சரக்கு; அதற்கு பணம் செலுத்தப்படவில்லை | 1,200 |
| பிப்ரவரி 9 | முகில் நிறுவனத்திற்கு சரக்கு திருப்பி அனுப்பியது பணம் பெறப்படவில்லை | 1,500 |
| பிப்ரவரி 10 | மனிஷ் நிறுவனத்திற்கு கடனுக்கு சரக்கு விற்றது | 13,300 |
| பிப்ரவரி 14 | முகில் நிறுவனத்திடம் சரக்கு கடனுக்கு வாங்கியது | 15,200 |

*(அல்லது)*

ஆ) பின்வரும் நடவடிக்கைகளை குணால் என்பவரின் தனிப்பத்தி ரொக்க ஏட்டில் பதிவு செய்க.

| | | தொகை |
|---|---|---|
| 2017 ஜன 1 | கை இருப்பு ரொக்கம் | 11200 |
| 5 | இரமேஷ் என்பவரிடமிருந்து பெற்றது | 300 |
| 7 | வாடகை செலுத்தியது | 30 |
| 8 | ரொக்கத்திற்கு சரக்குகளை விற்றது | 300 |
| 10 | மோகனுக்கு செலுத்தியது | 700 |
| 27 | அறைகலன் ரொக்கத்திற்கு வாங்கியது | 200 |
| 31 | சம்பளம் கொடுத்தது | 100 |

44. அ) முதலினச் செலவு மற்றும் வருவாயினச் செலவு - வேறுபடுத்தவும்.

*(அல்லது)*

ஆ) பின்வரும் விவரங்களிலிருந்து அர்ச்சனாவின் 2016 டிசம்பர் 31-ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார கணக்கைத் தயாரிக்கவும்.

| *பற்று இருப்பு* | *தொகை* | வரவு இருப்பு | *தொகை* |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 80,000 | கொள்முதல் திருப்பம் | 10,000 |
| கொள்முதல் | 8,60,000 | விற்பனை திருப்பம் | 3,16,000 |
| உள்ஏற்றிச் செல் செலவு | 52,000 | கொள்முதல் மீதான இறக்குமதி வரி | 30,000 |
| கூலி | 24,000 | விற்பனை | 14,40,000 |

*சரிகட்டுதல்கள் :*

அ) இறுதிச் சரக்கிருப்பு ரூ.10,000

ஆ) கொடுபடவேண்டிய கூலி ரூ.12,000

இ) உள் ஏற்றிச் செல் செலவு முன்கூட்டிச் செலுத்தியது ரூ.5,000

45. அ) கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து முன் பண மீட்பு முறையில் பாகுபடுத்தப்பட்ட சில்லரை ரொக்க ஏட்டைத் தயாரிக்கவும்.

| | | தொகை |
|---|---|---|
| 2017 ஜூலை 1 | காசாளரிடமிருந்து முன்பணம் பெற்றது | 2,000 |
| 7 | மடல் ஏடு மற்றும் பதிவேடுகள் வாங்கியது | 100 |
| 8 | வெள்ளைத் தாள்கள் வாங்கியது | 50 |
| 10 | ஆட்டோ ரிக்ஷா கட்டணம் கொடுத்தது | 200 |
| 15 | கூலி கொடுத்தது | 300 |
| 18 | தபால் செலவுகள் செய்தது | 100 |

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



| | | |
|---|---|---|
| 21 | எழுதுபொருள்கள் வாங்கியது | 450 |
| 23 | தேநீர் செலவுகள் செய்தது | 60 |
| 25 | துரித அஞ்சல் செலவு செய்தது | 150 |
| 27 | சிற்றுண்டி செலவுகள் செய்தது | 250 |
| 28 | ஏற்றிச் செல் செலவுகள் செய்தது | 150 |

*(அல்லது)*

ஆ) ரஹீம் என்பவரின் முப்பத்தி ரொக்க ஏட்டை பின்வரும் விவரங்களிலிருந்து தயாரிக்கவும்.

| | | தொகை |
|---|---|---|
| 2017 பிப்ரவரி 1 | கையிருப்பு ரொக்கம் | 25000 |
| | வங்கி ரொக்கம் | 10000 |
| 5 | தண்ணீர் சுத்திகரிக்கும் இயந்திரத்தை அலுவலகப் பயன்பாட்டிற்காக காசோலை மூலம் வாங்கியது | 8000 |
| 6 | ரொக்கம் செலுத்தி சரக்கு வாங்கியது | 9000 |
| 8 | டேனியலிடமிருந்து பெற்ற ரொக்கம் | 9900 |
| | வங்கி அவருக்கு அளித்த தள்ளுபடி | 100 |
| 10 | சரக்குகளை விற்று பெற்ற காசோலையை வங்கியில் செலுத்தியது | 40000 |
| 12 | அமலாவிற்கு காசோலை கொடுத்தது | 14500 |
| | அவரிடமிருந்து பெற்ற தள்ளுபடி | 500 |

46. அ) பல்வேறு வகையான கணக்கியல் மென்பொருள்கள் யாவை?

*(அல்லது)*

ஆ) கீழ்காணும் விவரங்களிலிருந்து இலாப நட்டக் கணக்கினை தயாரிக்கவும்.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| மொத்த இலாபம் | 50,000 | வட்டி பெற்றது | 2,000 |
| அலுவலக வாடகை | 10,000 | தள்ளுபடி பெற்றது | 3,000 |
| அலுவலக சொத்துகள் மீதான தேய்மானம் | 8,000 | வெளிதூக்குக் கூலி | 2,500 |
| | | காப்பீடு | 3,500 |
| தள்ளுபடி கொடுத்தது | 12,000 | பொதுச் செலவுகள் | 3,000 |
| விளம்பரம் | 4,000 | உள் ஏற்றிச்செல் செலவு | 1,000 |
| தணிக்கைக் கட்டணம் | 1,000 | | |

47. அ) இருப்பாய்வு தயாரிக்கப்பட வேண்டி உள்ளது எனக் கருதி கீழ்க்கண்ட பிழைகளைத் திருத்தம் செய்யவும்.
   - அ) விற்பனையில் ரூ.400 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.
   - ஆ) விற்பனைத் திருப்ப ஏட்டில் ரூ.500 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது.
   - இ) கொள்முதல் ஏட்டில் `600 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.
   - ஈ) கொள்முதல் திருப்ப ஏட்டில் ரூ.700 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது.
   - உ) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு ஏட்டில் ரூ.800 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.

*(அல்லது)*

ஆ) பின்வரும் செலவினங்களை முதலின, வருவாயின அல்லது நீள்பயன் வருவாயினச் செலவினங்களா எனக் கூறவும்.
   - i) நிலம் வாங்குவதற்காக வழக்கறிஞருக்கு கொடுத்த சட்டச் செலவுகள் ரூ.20,000
   - ii) புதிய பொருளைச் சந்தையில் அறிமுகப்படுத்த மேற்கொண்ட பேரளவிலான விளம்பரச் செலவுகள் ரூ.12,00,000
   - iii) தொழிற்சாலை உரிமம் புதுப்பித்தது ரூ.12,000
   - iv) தொழிற்சாலையில் வண்ணம் பூசுவதற்கானச் செலவு ரூ.4,000
   - v) கட்டிடம் பதிவு செய்யும் போது செலுத்திய பதிவு கட்டணம் ரூ.1,00,000

*********

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com